திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நம்முடைய இந்திய நாட்டின் உச்ச நீதிமன்றம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு உயர் கல்வி நிறுவனங்களில் வழங்கப்பட்டிருந்த 27 விழுக்காடு இட ஒதுக்கீடு சட்டத்திற்கு இடைக்காலத் தடையை விதித்திருக்கிறது. (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) இது இந்திய ஜனநாயகத்திற்கும், நம்முடைய நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கும், ஒரு கறுப்பு நாள். ஒட்டுமொத்த பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் இந்திய நாட்டிற்குமான கறுப்பு நாள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) ஆகவே, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நாங்கள் கறுப்புச் சட்டையை அணிந்து வந்திருக்கிறோம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

முற்பகல் 9-35

4. அரசினர் தனித் தீர்மானம்

உயர் கல்வி நிறுவனங்களில் 27 சதவிகித இட ஒதுக்கீட்டை நிறுத்தி வைத்து உச்ச நீதிமன்றம் அளித்துள்ள இடைக்காலத் தீர்ப்பு—நாடாளுமன்றத்தைக் கூட்டி முடிவெடுக்க மத்திய அரசை வலியுறுத்தல்

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு, இந்தப் பேரவையின் அனுமதியோடு, எல்லோருடைய அனுமதியும் நிச்சயமாக இருக்கும் என்ற நம்பிக்கையோடு, ஒரு தீர்மானத்தை இந்தப் பேரவையிலே வைக்க விரும்புகின்றேன்.

"29-3-2007 அன்று உச்ச நீதிமன்றம் அளித்துள்ள இட ஒதுக்கீடு குறித்த இடைக்காலத் தீர்ப்பு, கல்வியிலும், சமூக முன்னேற்றத்திலும், ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பின்னடைவை உருவாக்க வழிவகுப்பதால், நாடாளுமன்ற உரிமையைப் பாதிக்கும் வகையில் அளிக்கப்பட்டுள்ள அந்தத் தீர்ப்பு குறித்து விவாதித்து நல்ல முடிவெடுக்க நாடாளுமன்ற இரு அவைகளையும் உடனே கூட்டவேண்டும் என்றும், அந்தத் தீர்ப்பினால் அடித்தட்டில் வாழும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் உரிய முடிவுகளை எடுக்கவேண்டும் என்றும், இந்தப் பேரவை மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது." (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

2007 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

3. வரவு–செலவுத் திட்டம், 2007–2008, பொது விவாதமும் பதிலுரையும்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2007-2008 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம்-தொடர்ச்சி. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இந்திய நாடாளுமன்றம் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு உயர் கல்வி நிறுவனங்களில் 27 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கிய சட்டத்திற்கு உச்ச நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடை விதித்திருக்கிறது. நான் முன்பு குறிப்பிட்டமாதிரி இது இந்திய நாட்டினுடைய ஜனநாயகத்திற்கும், இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கும் ஒரு கறுப்பு நாள், இந்திய நாட்டு மக்களின் கறுப்பு நாள் என்பதை உணர்த்துகின்ற வகையில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நாங்கள் இன்று கறுப்புச் சட்டை அணிந்து இந்த ஆதங்கத்தை, வேதனையை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிற இந்த வேளையில், இந்திய நாட்டிலே வாழக்கூடிய இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஆறுதல் அளிக்கிற வகையில், மேலும் இந்த இட ஒதுக்கீடு நிலைப்பெறும், அதற்கு நான் இருக்கிறேன், நான் இந்திய நாட்டிற்கு வழிகாட்டியாக இருப்பேன் என்று, நேற்று வந்த இடைக்காலத் தடை தொடர்பாக நம்முடைய சட்டப் பேரவையில் ஏகமனதாகத் தீர்மானம் கொண்டுவருவதற்குக் காரணமாக இருந்த முத்தமிழறிஞர், தமிழினத் தலைவர், முதலமைச்சர் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)